செய்தித் தாளாகப் பதிவு பெற்றது

வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி௵ (1889) ஆவணி மீ ௨௰௪ உ. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அ௨] யாழ்ப்பாணம்- சாதாரண௵ மாசி மீ ௭ உ வெள்ளிக்கிழமை (19-2-1971) [இல-௪௬

# திரிகரண சுத்தியை வற்புறுத்தும் மகா சிவராத்திரி

பண்டிதர், சைவப்புலவர் திரு. வ. சுப்பிரமணியம்
தும்பைநகர், பருத்தித்துறை.

சிவராத்திரி - சிவபெருமானுக்குரிய இராத்திரி என்று பொருள்படும். சிவபெருமான் விருப்பு வெறுப்பு இல்லாதவர். ஞானமே திருமேனியாகவுள்ளவர். தம் பொருட்டு ஒன்றையும் வேண்டாதவர். அவர் செய்யும் செயல்கள் எல்லாம் ஆன்மாக்களாகிய நம்பொருட்டே அவர் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் தம்பயன்குறியாது செய்தருளுவர்

## ஐந் தொழில்கள்

படைத்தலாவது-(சிருட்டி): உயிர்களின் வினைகளுக்குரிய உடம்புகளை மாயையாகிய உலகமூல பொருளிலிருந்து தோற்றுவித்தலேயாகும்.

காத்தலாவது (திதி)- பல பிறவிகளிலே உயிர்கள் ஈட்டிய வினைகளுள் பக்குவமானவினைகளை அனுபவிக்கும் வரையும் எடுத்த உடம்பை நிறுத்தலேயாகும். அழித்தலாவது (சங்காரம்) இங்ஙனம் பக்குவப்பட்ட வினைகளை அநுபவிக்கும் பொருட்டு எடுத்த பிறவிகள்தோறும் பிறந்தும் இறந்தும் பொறுத்தற்கரியதாகலின், அந்த இளைப்பு நீங்கும் வண்ணம் கருவிகரணங்களையும் உடம்பு முதலியவைகளையும் பிரித்து வைத்தலேயாகும்.

மறைத்தலாவது (திரோபவம்) உயிர்கள் செய்த வினைக்கேற்ற போகபோக்கியப் பொருள்களின்மேல் உள்ள குறைகள் ஆன்மா அறிவிலே தோன்றுதவாறு மறைத்தலேயாகும். இன்னும் மறைப்பாவது உயிர்களின் அறிவை மறைத்து நிற்கும் அஞ்ஞானம் என்று சொல்லப்படும் ஆணவ பாசத்தையும், அந்த ஆணவ மலசம்பந்தம் காரணமாக, உயிரறிவிலே எழும் விருப்பு வெறுப்புகளாகிய மூலகன்மத்தையும், அக்கன்மம் காரணமாக, சிற்றறிவுடைய உயிர்களால் செய்யப்படும் நல்வினை தீவினையாகிய காரியகன்மத்தையும், அந்தக்கன்மத்திற் கேற்ற மாயையின் பகுதியாகிய உடம்புமுதலியவைகளுக்கு காரணமாகிய மாயையையும் தொழில்படுத்த ஏவும் இறைவனுடைய திரோதான சத்தியே- "மறைப்பு" எனப்படும். இந்த மறைப்பும் மேலுள்ள அருளால் என்பதும உயிர்களுக்கே உரியனவாம். படைப்பு முதலிய மூன்றும் சடப்பொருளுக்கே உரியன.

அருளாலாவது- (அனுக்கிரகம்) - ஆணவாதி மூன்று பாசங்களிலிருந்து விடுபட்ட உயிர்களுக்கு - என்றென்றைக்கும் மாறுத அளத்தற்கரிய பேரின்பத்தைத் தருவதேயாகும். இந்த ஐந்துதொழில்களையும் சிவபெருமான் தமது சத்திரூப சங்கற்ப மாத்திரையாற் செய்தருள்வர்.

## சங்கற்பம்

சங்கற்பமாவது இஃது இவ்வாறுருக என்று தமது திருவுள்ளமாகிய பெருங்கருணைத் திறத்திலே எழும் எழுச்சி விசேடமாகும. இங்ஙனம் அல்லாது, மனம், கை, கால முதலிய உறுப்புக்களைக் கொண்டு இந்த ஐந்து தொழில்களையும செயவாரல்லர். எந்தச் செயல் காலத்தையும இடத்தையும், ஒன்று, இரண்டு, பத்து, நூறு என்ற எண்ணிக்கை கொண்டதாக இருக்குமோ, அதெல்லாம் உயிர்களுக்குரிய வரையறைப்பட்ட சிற்றுயிர்களால் தமது வலிமைக்கேற்ற செயல்களாகும. உயிர்களோ அளவிறந்தவை. அவைகளால் ஈட்டப்படும் வினைகளும் அளவிறந்தன. அவ்வினைகளுக்கேற்ப அவ்வுயிர்களுக்கு கொடுக்கப்பட்ட உடம்புகளோ எழுகடல் மணலினும் அதிகமாகும். இது பற்றியே, "எழுகடல் மணலின் அளவிடின் அதிகம் என இடர்ப்பிறவி அவதாரம்" என்று அருணகிரி

---

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

அருவு மாகுவன்
உருவமாகுவன் அருவும்
உருவுமில்லதோர் தன்மையும்
ஆகுவன் ஊழின்
கருமமாகுவன், நிமித்தமுமாகுவன் கண்டாய்
பரமனுடைலை யாவரே
பகர்ந்திட வல்லார்

திருச்சிற்றம்பலம்
கச்சியப்பர்.

## மகா சிவராத்திரி விழா

### கதிர்காமத்தில்

23-2-71 செவ்வாய்க்கிழமை கதிர்காம க்ஷேத்திரத்தில் மகா சிவராத்திரி விரதத்தை கொண்டாடுவதற்குரிய ஒழுங்குகளை, கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் செய்கின்றது. வழமையான நிகழ்ச்சிகளுடன் நாராயணத்தாஸ் க‌ஷ்டியின் பஜனை வள்ளி திருமண நாடகம். சூரபன்மன்வதம் முதலிய தலைப்பில் வில்லுப்பாட்டு நிகழும் அனேக அடியார்கள் கலந்து கொள்வார்கள்.

x x x

### பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் நினைவு தினம்

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் 136 வது ஜனன தினம் எதிர்வரும் (27-2-71, சனிக்கிழமையாகும்- அன்று கதிர்காமம் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் மடத்தில் சிறப்பாகக் கொண்டாடப்படும் விஷேச பூசையும், அன்னதானமும் நடைபெறவிருக்கிறது

---

### நாதசுவாமிகள் கூறியருளினர்

இங்ஙனம் அளவின்பாற்படாத அறிவும் ஆற்றலும் உள்ள ஒரு ஒப்பற்ற அளவில் பேரொளி வடிவினனாகிய ஒருவனால், சங்கற்பமாத்திரையால், தொழில்படுத்தப்பட்டாலல்லது, படைத்தலும் அங்ஙனமே காத்தல முதலிய செயல்களும், ஜடப் பிரபஞ்சம், சித்துப் பிரபஞ்சம் எனும் இவ்விரண்டிற்கும் அமையாதென்பதனை நன்கு உணர்ந்துகொள்க. இது பற்றியன்றே,

"வான்கேடு, மாருதம்
பாய்ந்து அழல், நீர்,

---

## சிவராத்திரி புராண வெளியீடு ஒப்பற்ற சிவ புண்ணியம்

— திரு. சி. சிவகுருநாதன் எம். ஏ., அவர்கள்
(யாழ். கூட்டுறவுத் தமிழ்நூற் பதிப்பு விற்பனைக் கழகம்)

"சிவராத்திரி விரதஞ் சைவ சமயிகள் யாவராலும் ஆவசியகம் அநுட்டிக்கத் தக்கது" என்று நாவலர் பெருமான் அறுதியிட்டு ஆணையிடுகின்றார்.

கந்தபுராண கலாசாரம் ஊறியமையினாற்போலும் ஈழநாட்டிலே சிவராத்திரி விரதம்போல வேறெவ்விரதமும் பரவலாக மிகப் பழங்காலந் தொட்டு எம் முன்னோரால் அனுட்டிக்கப்படவில்லை எனலாம்.

இச்சிவராத்திரியின் மகிமை பல நூல்களிற் பல புலவர்களாற் கூறப்பட்டுளளதெனினும், கந்தபுராணம் தக்ஷகாண்டம் - அடிமுடி தேடிய படலத்தில் பிரமா தன் புதல்வனாகிய தக்கனுக்குச் செய்த உபதேசத்தில்,

"அரியும் யானுமுன் றேடுமவ்
வனற்கிரி யனல
கிரியெ னும்படி நின்றதா
லவ்வொளி கிளர்ந்த
விரவ தேசிவ ராத்திரி
யாலனை நிறைவற்
பரவி யுய்ந்தன ரன்னதோர்
வைகலிற் பலரும்"

என்று கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள் சிறப்பாக விதந்தோதுவது சிறப்புடையதாகும்

சிவராத்திரி விரதத்தின் மகிமைகளைச் சிறந்தமுறையில் விரிவாக அறிய மக்கள் ஆவலுற்ற காலத்தில், எம் நாடு செய்த தவப்பயனால் இற்றைக்கு இருநூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னே யாழ்ப்பாணத்தில் அவதரித்த வரதராஜ கவிராசர் என்ற அந்தண குலதிலகம் "சிவராத்திரி புராணத்தை"ப்பாடியளித்தார்.

வரதராஜ கவிராயர், யாழ்ப்பாணத்திலே மயில்வாகனப் புலவர், சின்னத்தம்பிப் புலவர் முதலியவர்கள் வாழ்ந்த காலத்துப் புலவர். இச்சிவராத்திரி புராணத்துக்கு அவர்கள் சிறப்புப் பாயிரம், பாடி வழங்கியுள்ளார்கள்.

"... ... ... விரதராசசிவசிசியின்
னீன் சரிதம் மிக விளங்கிட
விளம்பினன் ...... ... வரதராசன் மறைவாணராசன் மிக
மதுர ஆசு கவிராசனே"

என்று மயில்வாகனப் புலவரும,

"சித்தன் உயர் சிவ நிசிமான்மிய
மதனைச் செந்தமிழாற் றெரிந்
தல் செய்தான்...... காசுகர்
வரதபண்டிதன் முத் தமிழ்
வல்லோனே"

என்று சின்னத்தம்பிப் புலவரும் மனமாரப் பரவியுள்ளனர்.

இந்நூல் அறிவுடை ஆன்றோர் ஆணைவழியே நின்று இயற்றப்பட்டதென்பதை நூலாசிரியரே நூலகத்துத் தம் சிறப்புப் பாயிரத்தில் அருளியிருக்கின்றார்.

"தில்லை வனத்து அறிஞர்
திருக கடைக்கண் நோக்கி
முந்த உரைத்தனர் பலரும்
ஆயினும் நீ ஆகம நூல்
மொழி வழாமல் பந்தம்
அறுகிடு சிவராத்திரி விரத
சரிதனைப் பாடுக என ... ...
செப்பலுற்றேன்" என்கின்றார்.

இத்துணைச் சிறப்புகளெல்லாம் நிறைந்த புலவர்

வளர்ச்சி 2-ஆம் பக்கம்

"மண்கெடினும்
தான்கெட்டலின்றிச்
சலிப்பறியாத் தன்மையனுக்கு"

என்று திருவாசகங் கூறுவதாயிற்று

இன்னும், சங்கற்பம் என்பது சிவபெருமானின் வேறல்லாததும், அக்கினிக்குச் சூடு போன்றதும், மலருக்கு மணம் போன்றதுமான சிவசக்தி, உலகமூலப் பொருளாகிய ஜடசக்தி எனப்படும், சிவபெருமானு

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

## சிவபுராணம்.

சிவராத்திரி புண்ணிய தினத்தை முன்னிட்டு மில்க்வைற் ஸ்தாபனத்தார் உரையுடன் கூடிய சிவபுராணத்தை வழங்கவிருக்கிறார்கள். வாங்கிப்படித்து பயனடையுங்கள்.

---

# சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சாதாரண ஹு மாசி மீ ௭-௨ வெள்ளிக்கிழமை [1971]

## வேதாரணியஞ் சைவக் குருக்கள்மார்

பன்னெடுங்காலமாக வேதாரணியத்தைச் சேர்ந்த குருக்கள்மார் ஆலயம், விவாகம், தீட்சை, ஈமக்கிரியை சம்பந்தமான கிரியைகளை யாழ்ப்பாணப் பகுதிகளிலும், கொழும்பிலும் வசித்துப் புரிந்துவந்தனர். அவர்கள் விசேஷ நிர்வாண தீட்சைகளுடன் ஆசாரியாபிஷேகமும் பெற்றவர்கள். அவர்கள் குருத்துவக் கடமைகளுடன் திருமுறைப் பாராயணம் புராணபடனம் முதலிய சிவதொண்டுகளையும் புரிந்து வந்தனர். அவர்களுடைய சேவையினல் மக்கள் திருமுறை முதலிய சைவ நூல்களின் பெருமைகளையறிந்து அவற்றை முறையாக ஓதவும் கற்றுவந்தனர். விபூதி, உருத்திராக்கம், பஞ்சாட்சரம் ஆகிய சைவசாதனங்களின் பெருமைகளை உணர்ந்து அவற்றை அணிந்தும் போற்றியும் பேறடைந்தனர்.

அடக்கன்முறை கணபதிக்குருக்கள் அவரது புத்திரன் க. செல்லையாக்குருக்கள், நீராவியடைத்தைச்சேர்ந்த மு. ஐயாசாமிக் குருக்கள், ந. சோமசுந்தரக் குருக்கள் போன்ற பிரசித்திபெற்ற குருக்கள்மார் வேதாரணியக் குருக்கள் இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்குச் சொந்தமான நிலங்களும் கோவில்களும், மடங்களும் இங்கு இருக்கின்றன. அவர்கள் குடும்பத்துடன் இந்நாட்டில் வாழ்வதில்லை அவர்களுடைய பெண்கள் கடலைக் கடக்கின்ற விதியுடையவர்களல்ல. அவர்கள் இடையிடையே வேதாரணியஞ்சென்று திரும்புவார்கள். அவர்கள் இந்நாட்டிலில்லாத காலத்தில் அவர்களுடைய பங்காளர்கள் அவர்களுக்குப் பதிலாகக் கடமையாற்றினர்கள்.

இலங்கை சுதந்திரமடைந்த பின்பு அரசாங்கம் விதித்துள்ள சட்டங்களின் பயனுக அவர்கள் இங்கு வழமைபோல வந்திருந்து குருத்துவக் கடமை புரிவது கஷ்டமாகி விட்டது. நூற்றுக்கு மேற்பட்டவர்கள் முன்னிருந்தார்கள். இப்பொழுது கிட்டத்தட்ட பதினைந்து பேர்கள்தான இங்கு இருக்கின்றார்கள்

இப்பொழுது அரசாங்கம் விஸாப் பெற்றுள்ள ஒவ்வொருவருக்கும் ரூபா 500/= வரி விதிக்கப்போவதாகத்தெரிகின்றது. இக்குருக்கள்மார் இவ்வரியைக் கட்டுவதற்குத் தகுதியுடையவர்களல்லர். அவர்களுடைய வருமானம மிகக் குறைந்தது. அவர்கள் கிரியைகளில் பெறும் தக்ஷிணையைக் கொண்டே சீவிக்கின்றவர்கள். அவர்களுடைய உணவு, இன்னபிற செலவுகளுக்கும் அவர்களுடைய குடும்பச் செலவுகளுக்கும் வருவாயில்லாது கஷ்டமுறுபவர்கள். இவ்வாறன நிலைமையில் இக்குருக்கள்மார் இந்நாட்டில் இனிமேல் வசித்துக் குருத்துவமபார்க்கமுடியாது. அவர்கள் தாய் நாடு திரும்ப வேண்டிய அவல நிலையேற்படும். முன்னரும் சில வருடங்களுக்குமுன் அரசாங்கமவிதித்த விஸா வரியின் காரணமாக இக் குருக்கள்மாரிற் பலர் இந நாட்டிற்கு வருவதை நிறுத்திவிட்டார்கள். இக் குருமாருடைய சேவை சைவ மக்களுக்கு அவசியம் தேவை, அவர்களுடைய சேவையினுல் சைவ மக்கள் சைவ சமய வுண்மைகளை யறிவார்கள். சைவ சமயக் கிரியைகளை விசுவசித்துச் சைவ வாழ்வு நடாத்தி இம்மைப் பயனையும் மறுமைப் பயனையும அடைவார்களை. ஆகவே நமது மக்கள் இக்குருமாருக்கு அரசாங்கம விஸா வரி விதிப்பதைத் தடைசெய்ய முயற்சித்தல் பெருந் தருமமாகும்.

---

### நயினுதீவு நாகபூஷணியம்பாள் கோவிலில்

## சிவராத்திரி விழா

ஷை ஆலயத்தில் சிவார்த்திரி வழிபாடு சிறப்பாக நடைபெற ஒழுங்குகள் செய்யப்பெற்றுள்ளன. நான்கு யாமமும் விசேஷ அபிஷேகம், திருமுறையோதல், நற்சிந்தனை யோதல் பஜனை முதலியவற்றுடன் புராணபடனமும் நிகழும் ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய மகா சிவராத்திரி விழா நூல் (இலவச) வெளியீடும் நிகழும்.

x x x

### யாழ். சைவ பரிபாலன சபை நாவலர் ஆச்சிரமமண்டபத்தில்

வழமைபோல ஷை வழிபாடு நடக்கும். நடராசப்பெருமானுக்கு நான்கு யாமமும் விசேஷபூசை சிவபூசா மண்டபத்தில் சிவபூசை, தமிழ்மறையோதல், புராணபடனம் முதலிய நிகழ்ச்சிகள் வழிபாட்டில் இடம்பெறும். சைவ அன்பர்கள் கலந்து கொள்வார்களாக.

---

## கந்தபுராணபடனம்

### விசேட படிப்பு

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறுகின்றது கந்தப்புராண படலத் தொடரில் யுத்தகாண்டம் விசுவரூபப் படிப்பும் தேவர்கள் பூசை செய்யும் படிப்பும் விசேஷ பூசையுடன், 26-2-71 வெள்ளிக் கிழமை மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

---

## அணிந்துரை அரங்கம்

வரதராஜக் கவிராசர் இயற்றிய

### சிவராத்திரி புராணம் மூலமும்

யாழ்ப்பாணத்து அச்சுவேலி மயில்வாகனம்பிள்ளை அவர்கள் குமாரரும் உடுப்பிட்டி வாசருமாகிய குமாரசூரியம்பிள்ளை அவர்கள் இயற்றிய

**பதவுரையும்**

தம்பைநகர் பிரமஸ்ரீ த. சோமசுந்தரஐயர் கேள்விப்படி மறவன்புலோ திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்களால் யாழ்ப்பாணம் ஸ்ரீ காந்தா அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டது.

விலை ரூபா: 12-50

மாசி மாசத்துக் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியில் சிவபெருமானைக் குறித்து அநுஷ்டிக்கும் விரதம் சிவராத்திரியாகும். அத் தினத்திலே உபவாசஞ்செய்து நான்கு யாமமும் நித்திரையின்றிச் சிவபூசை செய்தல் வேண்டும். சிவபூசையில்லாதவர்கள் நித்திரையின்றி ஸ்ரீ பஞ்சாட்சரசெபமும், சிவ புராண பாராயணமும் சிவாலய தரிசனமும் செய்தல் வேண்டும். இவை சைவ சமயிகள் யாவராலும் ஆவசியகம் அநுஷ்டிக்கத் தக்கன.

சிவபுராண சிவாணத்துக்குச் சிறந்தநூல் இச்சிவராத்திரி புராணம். இதனை இயற்றியவர் இருநூற்றைம்பது வருடங்கட்கு முன்னுள்ள புலவர் வரிசையில் சிறந்த சுன்னுகம் வரதபண்டிதரவர்கள். இவர் அந்தணர் மரபைச் சேர்ந்தவர். செந்தமிழையும் வடமொழியையும் துறைபோகக் கற்றவர். வைத்தியம் சோதிடம் முதலிய கலைகளிலும் வல்லவர் இவர் முருகப் பெருமானிடத்தில் குன்றாத பத்தியுடையவர். சிவராத்திரி புராணம் ஏகாதசிப் புராணம், கிள்ளைவிடு தூது, அமுதாகரம் பிள்ளையார் கதை முதலிய நூல்களை இயற்றியவர்.

சிவராத்திரி புராணம் சிவராத்திரி விரத மகிமையைக் கூறுவது வேதாகமங்களின் கருத்துப் பிறழாமல் இயற்றப்பட்டது இந்நூலின் கண் கடவுள் வாழ்த்து தற்சிறப்புப்பாயிரம் சிவராத்திரி உற்பவச் சருக்கம் சிவராத்திரி மான்மியச் சருக்கம் சுகுமாரச் சருக்கம், அங்குலச் சருக்கம், கன்மாடபாதச் சருக்கம், விபரிசச் சருக்கம், குபேரச் சருக்கம், சாலிகோத்திரச் சருக்கம் முதலிய பிரிவுகளுண்டு.

வரதபண்டிரின் காலத்தில் மாதகல் மயில்வாகனப் புலவர், நல்லூர்ச் சின்னத்தம்பிப் புலவர் முதலிய தலைசிறந்த புலவர்கள் வாழ்ந்தார்கள். இவர்கள் இருவரும் இந்நூலுக்குச் சிறப்புப்பாயிரம் அளித்துள்ளனர். புலவர் அவர்களின் செய்யுட்கள் சொன்னயம், பொருணயம் ஓசையின்பம் உவமைநயம் பக்திச் சுவை பொருந்தியவை. இவரது கவித்துவ ஆற்றலை விளக்க ஒரு எடுத்துக் காட்டாக சிவராத்திரி உற்பவச் சருக்கத்தில் ஒரு செய்யுளைக் குறிப்பிடுவோம்:

காலனுர் வீழத்தாக்குங்
கழல்கழற் காலா போற்றி
மூலமாம் பொருளுக் கெல்லா
முழுமுதற் பொருளேபோற்றி
பாலநேத்திரனே போற்றி
படர்திரைப் பாவின் வேலை
யாலமுண் டிருண்ட கண்டத்
தண்ணலே போற்றி போற்றி.

## சிவராத்திரி புராண வெளியீடு

1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

பெருமானுரால் இயற்றப்பெற்ற இந்நூல் பலவாண்டுகளுக்கு முன்னர் உடுப்பிட்டி குமாரசூரியப்பிள்ளையின் அரிய உரை விளக்கம்பெற்று வெளிவந்தது. மேலும் சில ஆண்டுகள் கழித்துத் தும்பை நகர் பிரமஸ்ரீ ச. சோமசுந்தரஐயரவர்களால் மறுபதிப்புப் பெற்று வெளிவந்தது

இப்போது அதன் பிரதிகள் கிடைப்பது அரிதாகிவிட்டது இது பொதுவாக நம் யாழ்ப்பாணத்துப்பெரியவர்களின் நூல்களுக்கு உண்டாகும் ஒரு பரிதாபமான நிலை. நூல்கள் எதுணைச் சிறப்பினவாயினும் எவ்வளவு புலமை பெற்றவர்களால் இயற்றப்பட்டனவாயினும், அவற்றைப் பாதுகாத்து அடுத்த சந்ததியினர்க்கு வழங்கும இயல்பு எம்மவரிடத்தில் இல்லை. இக்காரணத்தால ஈழத்தில் இயற்றப்பட்ட அரியபெரிய தமிழநூலகள் பல அழிந்து ஒழிந்து மறைந்துவிட்டன.

இந்த அவலநிலை இவ்வருமருந்தன்ன சிவராத்திரி புராணத்திற்கும் நேரா வண்ணம் கைகொடுத்துதவ முன்வந்தார் சைவப் பெரியார் மு. கணபதிப்பிள்ளை அவர்கள். அன்னருக்கு இந்நூலை வெளியிடுதல் போன்ற பணிகளுக்கு வேண்டும் பொருட்செல்வ

---

தமிழறிவு குறைந்தவர்கள் இந்நூலினை இலகுவில் கற்று விளங்ககூடியவகையில் யாழ்பாணத்து அச்சுவேலியூரைச் சேர்ந்த மயில்வாகனப் பிள்ளை குமாரர் குமாரசூரியப் பிள்ளை பதவுரை எழுதிவெளியிட்டார்கள். அவருடைய உரை தமிழ் மரபு வழுவாத வகையில் செய்யுட்களின் பொருளை வழுவில்லாமல் தெளிவாய் விளக்குகின்றது. ஷை உரைக்கு, புலோலி ம. முத்துக்குமாரசுவாமிக் குருக்கள், சுன்னுகம் அ. குமாரசுவாமிப்புலவர் முதலியவர்கள் சிறப்பாயிரம் வழங்கியுள்ளார்கள்.

தமிழ் மொழியையும் சைவ சமயத்தையும் நூல் வெளியீட்டினல் ஓம்பி வருகின்ற செந்தமிழன்பர் மறவன்புலோ திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்கள் இந்நூலையுப் பிரசுரஞ் செய்யும் அரிய பணி பாராட்டற்குரியது. அவருடைய முகாமையிலுள்ள மறவன்புலோ வளளக்குளம் பிள்ளையார் கோயிலில் யோகர்சுவாமிகள் சிவராத்திரி காலங்களில் புராணபடனஞ் செய்தமையை அவர் தமது பதிப்புரையில் குறிப்பிட்டிருக்கின்றனர். அம்மெய்ஞ் ஞானியாருடைய நல்லாசியைப் பதிப்பாசிரியர் பெற்றமையினுற்றான் இவ்வரிய பணியை அவர் புரியத் திருவருள் கூட்டி வைத்திருக்கின்றது.

சைவமக்கள் இந்நூலைப் பெற்றுப் படித்தல் வேண்டும். ஆலயங்களில் சிவராத்திரி காலங்களில் புராண படனத்துக்கு சிறப்பாக உபயோகிக்கலாம். அச்சுத்தொழிலுக்குரிய உபகரணங்களின் விலையேற்றம். தொழிலளர் வேதன ஏற்றம். காகித விலையேற்றம்உள்ள காலத்தில் பணச் செலவை நோக்காது அவர் வெளியிட்டிருக்கின்றனர்.

சைவமக்கள் இந்நூலினை விலைக்குப்பெற்று கற்பதனுல் அவர்களுடைய அறிவும் விருத்தியாகும். பதிப்பாசிரியரும் இன்னும் இன்னூலைப் போன்ற நூல்களைப் பதிப்பிக்கத் தூண்டுவதாகவும்மிருக்கும்.

---

## மகாசிவராத்திரி வெளியீடு

வெளியிடுவோர்:

மு. பாலசுந்தரம் தம்பதிகள் நயினை

இலவச வெளியீடு.

அச்சகம்:

விவேகானந்த அச்சகம்

நடராஜர் தத்துவத்தை விளக்கும் சிவகாமசுந்தரி சமேத நடராஜப் பெருமானுடைய அழகிய திருவுருவப் படம் முகப்பிலமைந்திருக்கின்றது. திருநாவுக்கரசு சுவாமிகள் பாடிய போற்றித் திருத்தாண்டவம் திருப்பதிகங்கள் திருவாசகம் திருப்படையாட்சி நூலில் அடங்கியுள்ளன. இவற்றைச் சிவராத்திரி வேளையில் ஓதுகின்றவர்கள் சிவபெருமானுடைய அருளை இலகுவில் பெறலாம்.

சிவராத்திரி விரத மகிமை வரலாறும் நூலில் சேர்க்கப் பெற்றிருக்கின்றன. பொது மக்கள் சிவராத்திரி விரதத்தை சைவமுறைப்படி அனுட்டிப்பதற்கு அநுகூலமுள்ளவை

— 0 —

மிக்க தனவந்தர் வரிசையில் இடமில்லையாயினும், சைவப் பற்றும், தமிழ்ப் பற்றும் நிறைந்தபுண்ணியவான்கள் வரிசையின் முதலிடம் நிச்சயமாக அவருக்கே உண்டு எனலாம். சில ஆண்டுகளுக்கு முன்னே, திரு க. வச்சிர வேலு முதலியார் அவர்கள் யாழ்ப்பாணத்தில் சிவஞானபோதம் பாடஞ் சொல்லத் தொடங்கிய போது பாடங்கேட்க வந்த பெரியோர்கள் சிவஞான போதநூற் பிரதியில்லாமல் இடர்பட, மிகக் குறுகிய காலத்தில் நூலை அச்சிட்டது மல்லாமல் பிரதிகளை இலவசமாகவும் வழங்கினர். மேலும் பலஅரிய நூல்களை இலவச வெளியீடுகளாக வழங்கி வருகின்றார்,

சிவராத்திரி புராணத்தை அச்சேற்றி வெளியிட்ட திரு. மு கணபதிப்பிள்ளை அவர்கள் எமக்குச் செய்துள்ள பெரும் பணி மனமாரப் போற்றப்பட வேண்டியதாகும்.

இது போன்ற நூல்களை வெளியிடுபவர்கள் பெரும் பொருள் நட்டத்துக்குள்ளாகின்றன ரென்பதையும் ஆனபடியால் அவர்கள் ஒரு முறைக்கு மேல் ஒரு நூலையும் வெளியிடுவதில்லை என்பதையும் நேரிற் கண்டறிந்த திரு. கணபதிப்பிள்ளை அவர்கள் அழகான அச்சுத்தாளில் 4[illegible]6க்கு மேற்பட்ட பக்கங்களைப் பெரும் பொருள் செலவு செய்து அற்ப விலைக்கு வழங்க முன்வந்த அணிச்சலைப் பாராட்டாமல் இருப்பது எங்ஙனம் முடியும்?

இப்பதிப்பில் பல சிறப்புகள் உண்டு. செய்யுள்கள் முதலில் இலக்கண மரபுக்கமையவும், பின்னர்ச்சந்திகள் பிரித்து எளிமைப் படுத்தப்பட்டும் இருக்கின்றன. ஒவ்வொரு செய்யுளும் இங்ஙனம் இருமுறை அச்சிடப்பட்டமை செலவை அதிகப்படுத்துமாயினும், அன்பர்கள் அனைவரும்

( வளர்ச்சி 3- ஆம் பக்கம் )

## திரிகரண சுத்தியை வற்புறுத்தும் சிவ

1-ஆம் பக்கத்து வளர்ச்சி

டைய உடைமையாம் மாயா சக்தியை தொழில்படும் வண்ணம் கருதுதலேயாகும். உலகத்தைத் தொழில்படுத்தும் சக்தி சிவ பெருமானுடைய திருவுளக்குறிப்பை நோக்கி நிற்றலே யாகும். இதனையே, "வாக்கே நோக்கியமங்கை மணாளனை" என்று அப்பமூர்த்திகளுக்கு அருளிச் செய்வாராயினர் இங்ஙமான வரையறையப் படாத ஐம்பெருந் தொழில்கள் சிவபெருமானுக்கே உரியனவாகும் அந்தப் பெருமானை நோக்கி போக போக்கியங்களை விரும்பிச் செய்த காமிய தவங்காரணமாக, அவர் தமது கருணையினாலே - அந்த உயிர்களுக்கு இந்த உலகத்தில் நீண்டவாணாளும், நோயின்றியன்ற யாக்கையும், அளவிறந்த செல்வமும்' மாடமாளிகைகளும் தந்து, நற்பேற்றிலே வைத்தல் போலவே, வானுலகமாகிய தேவலோகப் பேற்றிலே சிறந்த தவங்களைச் செய்தவர் களுக்கு, இந்திரலோகம் சுவர்க்க உலகம். வைகுண்டஉலகம் முதலிய விழுமிய உலகங்களிலே, எண்டிசைக் கனகமும், பற்பதக் குவையும், பைம்பொன் மாளிகையும், பவளவாயவர் போகமும கற்பகப் பொழிலும ஆகிய அளவில் பெரும் போகத்தை துய்த்தருளுமாறு வைத்தருள்வன் ஆறை ன் என்க.

### அயன் மால் பூசல்

இன்னும், அவர்களிடத்திலேயே அவர்களறிவிலே கலந்துள்ள ஆணவமல சத்தி வலி குன்றுமாறு, படைத்தல் முதலிய செயல்களைச் செய்யும் ஜனனி, ஹாரினி (ஆரணி), ரோதயித்திரி முதலிய சத்திகளையும், அவ்வயன், மால் உருத்திரன் முதலியோரிடத்தில் பதித்தருள்வர். அச்சக்திகளே அங்ஙனம் படைத்தல் முதலிய செயல்களைச் செய்தருளும். இதனை அந்த அயன் மால் முதலியோர் அறிந்து கொள்ளாது, அந்தப்படைத்தல், காத்தல் முதலிய செயல்களுக்குத் தாங்களே பரம காரணர் எனத் தருக்கி மயங்குவர். அதனால் அவர்கள் தங்களுள்ளே தனித்தனி தாம் தாமே தலைவர் என ஓர்கால் பூசலிட்டுப் போர் புரிந்தனர். அவர்களது வாழ்நாள், மனிதரின் வாழ்நாளிலும்பார்க்கஎத்தனையோகோடிமடங்கு விரிந்ததாயினும் ஒரு எல்லைக்குட் பட்டனவேயாகும். அவர்கள் வசிக்கும் உலகம் இவ்வுலகத்தினும் எத்தனையோ பங்கு விழுமியதாயினும் ஒரு அளவின் பாற்பட்டதேயாகும், அவர் அவர்களுடைய காலமும் போகமும், காலாந் தரத்தில் அழியுந்தன்மையுடைய தாகும இதனை,

"நூறுகோடி பிரமர்கள்
நொங்கினர்
ஆறுகோடி நாராயணர்
அங்ஙனே
ஏறுகங்கை மணலெண்ணி
லிந்திரர்
ஈறிலாதவன் நல்லீச
னொருவனே
(அப்பர் தேவாரம்)

என்றும்.

மண்தனில் வாழ்வும் வானத்தரசு
அயன் மாலார் வாழ்வும்
எண்டரு பூதபேத யோனிகள்
யாவும் எல்லாம்
கண்ட இந்திரமா சாலங்களுங்
கழதிரதங் காட்டி
உண்டு போலின்றம் பண்பின்
உல்கின அசத்துமென்பர்.
(சித்தியார்)

காடு போந்தனன் இந்திரன்
மற்றும் பொன்னகர் கிரிந்து
பாடு சாய்ந்தது சயந்தனும்
சிறையிடைப்பட்டான்
நாட்டில் ... ... ...

இங்ஙனம் அளவின்பாற்பட்ட போகமும, வாழநாளும், எல்லைப்பட்ட ஆயுளும், அறிவும் தமது தவத்திற் கிரங்க, சிவன்தந்தபோகங்களாம் எனக் கருதாது போர் புரிந்தமையால், உலகமெல்லாம் அல்லலுற்றன. அங்ஙனம் உயிர்களின் துன்பங்கண்டு, ஆற்றுத உயிர்க்குயிராகிய சிவபிரான் அவ்விருவர்களுக்கிடையே ஒரு சோதிவடிவாய்த் தோன்றி, இந்தச் சோதியின் அடியையும முடியையும்; காணவல்லவரே தலைவராவீர் எனக கூறியருள, அவவயன்மாலிருவரும் அன்னமும ஏனமும ஆகி. அந்தச் சோதியின அடிமுடிதேடிக் காணுதுவருந்தி,

வளர்ச்சி 4ம் பக்கம்

## சிவராத்திரி வழிபாடு

மகாசிவராத்திரி தினத்தை முன்னிட்டு, இந்து இளைஞர் மன்றத்தின் ஆதரவில் வண்-மேற்கு அரசடி விநாயகர் ஆலயத்தில், நான்கு யாமமும் அபிஷேகாராதனைகளும், விசேஷ மேளகக்சேரிகளும், ஷெ மன்றத்தினரால் வில்லுப்பாட்டு, விரிவுரைகளும், மற்றும் பல கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## கோப்பாய் வீரபத்திர சுவாமி கோவிலில்

கோப்பாய் வீரபத்திர சுவாமி கோவில் மகாசிவராத்திரி தினம் வழமைபேல சிறப்பாக நடைபெறவுள்ளது.

23 ம் திகதி பகல் நவோத்தர சத சங்காபிஷேகமும், இரவு உற்சவமும், சங்கீதஉபந்கியாசம். சொற்பொழிவு ஆகியனவும் இடம் பெறும்.

x x x

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி இசைத்தமிழாசிரியர் கதாகாலட்சேப மணி திருதச. பொன்னம்பலம் அவர்களின்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ: இல. M. B. 10854

காரைதீவு மேற்கு S. ஆறுமுகம் கணவதிப்பிள்ளை —வழக்காளி

எதிராக

காரைதீவு மேற்கு வேலுப்பிள்ளை தர்மலிங்கம் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 10854 ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி, 1971-ம் ஆண்டு சித்திரை மீ 6 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபாய் 4594/-ம் 2-6-69 தொடக்கம 5-8-70 வரைக்கும் ரூபாய் 3000 க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதவட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 353/- அதாவது ஏற்பட்ட செலவு ரூபா 246 சதம 55 வெலியாத்துச் செலவு 59/- இனிமேல் வரும் செலவு ரூபா 47 சதம் 45.

ஆதன விபரம்

வடமாகாணம். யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பற்றுப் பகுதி காரைதீவு 'கோவிற்பற்று காரைதீவு மேற்கு இறை" "காங்கேசன் புலசிடை நிலப்பரபபு இலாச்சம் 7ம் குழி 1ம் பனைவடலியும் பனைகளுடனும் வீடுகளுடனும், எல்லைகள்:-

கிழக்கு :- வைத்திலிங்கம் பெண் பொன்னம்மாவினுடையதும். அம்பலவாணர் பெண் சின்னக்குட்டியினுடையதும், கந்தப்பு நாகமுத்துவினுடையதும் கணவதிப்பிள்ளை கைம்பெண் தெய்வானையினுடையதுப் ஆதனங்கள்.

வடக்கு :- சுப்பிரமணியக் திருவருளானந்தருடைய ஆதனம்

மேற்கு :- ஆறுமுகம் சோமசுந்தரத்தினுடையதும், S. ஆறுமுகம் கணவதிப்பிள்ளையினுடையதும் ஆதனங்கள்.

தெற்கு :- கந்தர் கைம்பெண் காமாட்சியினுடைய ஆதனம். இதில் உள்ளதும் உடையதும்.

எ. பி. பி எதிர்மன்னசிங்கம்

107. பெரியதெரு. வெந்தீஸ் கொமிஷனரும்,

யாழ்ப்பாணம். விலைமதிப்பாளரும்.

4-2-71 எம். 501 19-2-71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

A தம்பியையா அருணசலம்பிள்ளை மல்லாகம் வழக்காளி

வழ. இல: M B, 8965 எதிராக

வேலுப்பிள்ளை இரத்தினம். ஏழாலை —எதிராளி

யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டின் M. B 8965-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1971-ம் ஆண்டு சித்திரை மாதம் 1ம் திகதி (1-4-71) வியாழக்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும.

தீர்வைத்தொகை :- முதல் வட்டி ரூபாய் 3812 — 50 ம் 20-3-67 தொடக்கம் 21-9-67 வரைக்கும் ரூபாய் 2250/- க்கு 9 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதவட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 385 — 81 சதமும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகம் கோவிற்பற்று ஏழாலை இறை "வெளிவிக் நலவன்தனை" நில வர. 5. செய்பயிர் வான்பயிர்களுடன். இதற்கெல்லை கிழக்கு A. மரியதாஸ் இராசநாயகத்தின் ஆதனம். வடக்கு இளையதம்பி பெண் சிதேவிக்கு உரிய ஆதனம். மேற்கு ஒழுங்கை தெற்கு வேலுப்பிள்ளை கைம்பெண் அன்னப்பிள்ளைக்கும் சிராளபிள்ளை பெண் தவமணியின் கருத்தாளருக்கும் உரிய ஆதனம். இவ்வெல்லைக்குள் அடங்கியவைகளும் தெற்கு எல்லைக் காணியில் உள்ள கிணற்றில் பங்கும.

167/1, கோவில் வீதி, ப. நா. தருமலிங்கம்

கல்லூர் வடக்கு. கொமிஷனரும், விலைமதிப்பாளரும்,

யாழ்ப்பாணம். 14-2-71 எம் 508 1-2-71

## அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம், காங்கேசன்துறைவீதி, 284ம் நம்பர் கடையில் திரு. கா. ந. இளையதம்பி அவர்களிடம் 1969-ம் ஆண்டு டிசம்பர் (மார்கழி) மாதம் 1-ம் திகதி (1-12-69) திகதிக்கு முன்வைத்த அடைவு நகைகளில் 15-3-71 திகதிக்கு முன் மீட்கப்படாதவை 1971-ஆம் ஆண்டு மார்ச் (பங்குனி) மாதம் 17-ம் திகதி (17-3-71) புதன்கிழமை காலை 10 மணி தொடக்கம் மேற்படி கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை

ஏலவிற்பனவாளர்

"இராசகிரி" கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்

643, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம். எம். 503 19, 26—2—71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல. M. B 10885

பொன்னம்பலம் சின்னத்தம்பி உரும்பிராய் வடக்கு —வழக்காளி

எதிராக

மூருகேசு சச்சிதானந்தம். பத்தைவேனி. இந்த காளியப்பர் முருகேசுவின் சொத்திற்கு சட்டபூர்வமான பிரதிநிதி. —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B / 10885-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1971ம் ஆண்டு சித்திரை மாதம் 8-ம் திகதி (8-4-71) வியாழக்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை - முதல்வட்டி ரூபா 1300/00ம் 12 6-1969 தொடக்கம் 7-2-1970 வரைக்கும் ரூபா 800/ 00 க்கும் 10 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 389/99ம் இதில் 8-3-70 ல் கொடுத்த ரூபா 500 / 00 கழித்து அறவிடப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்றிக், வலிகாமம் கிழக்கு அச்சுவேலி கோவிற் பற்று பத்தைவேனி இறை "முடியான்சீமா" நிலப்பரப்பு (5) ஐக்தும் செய்பயிர் வான்பயிர்களும் வீடுகளும். இதற்கு எல்லை கிழக்கு வேலு ஆறுமுகத்திற்கு உரிய ஆதனம் வடக்கு சின்னத்தம்பி அருணசலத்தின் ஆதனம். மேற்கு சின்னத்தம்பி அருணசலத்திற்கும் மேற்பேருக்கும் உரிய ஆதனம் தெற்கு ஒழுங்கை இதடங்கலும் சொரியலாய் 8 / 15 பங்கு.

பதிவு இலக்கம் யாழ்ப்பாணம் K. 234/10.

கா. தர்மலிங்கம்

உரும்பிராய் கொமிசனரும், விலைமதிப்பாளரும்

14-2-71 எம். 509 19-2-71

## தவப்பொழுதை அவப்பொழுதாக்குகிறர்



பக்தர்: "சிவராத்திரி விரததினம் நெருங்கநெருங்க, ஒரே ஆனந்தம்!

"திருக்கே தீச்சரம்
போகாமல்
இருப்பேனோ? — இந்தச்
சென்மத்தை வீணாகக்
கழிப்பேனோ...?

என்று, என் உள்ளம் அந்த அப்பனது சந்நிதியிலும், உயிர் இங்குமாக உலாவிறன் பாருங்கோ? எவ்வளவு அருட்காட்சிகள் அங்கு!

சித்தர்: "நீங்கள் இப்படிச் சொல்லுவதைக் கேட்க ஆச்சரியமாயிருக்கம்மான்! இக்காலம் 'விரதமென்ன? கோயிலென்ன...?' என்பாரும், மகாசிவராத்திரிக்கு,

"சினிமா'ப் பாராமல்
இருப்பேனோ? என்றும்,
நாடகம் பாராமல்
நலிந்திடுவேனோ......?

என்றும், அலைந்துதிரிந்து, தவப்பொழுதை அவப் பொழுதாக்குகிறார்கள்! இன்றைய அவலநிலையை நீக்க, சைவ அறிஞர்களும், சபைகளும் ஆவன செய்வாரா?

"நாயன்மார் - நாதன்"

சமயசேவைகளைப் பாராட்டி (23-2-71) மஹா சிவராத்திரி அன்றிரவு கோப்பாய் வீரபத்திரசுவாமி கோவில் மண்டபத்தில் கோப்பாய் திருவருள் தவநெறி மன்றத்தாரால் பொன்னாடை போர்த்தலும். பட்டமளிப்பு வைபவமும் இடம்பெறும்.

—:—

## சிவராத்திரி புராண...

2-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

படித்துப்பயன் பெறல் வேண்டுமென்ற உயர்நோக்கத்தை விளக்குகின்றது. முந்திய பதிப்புக்களில் இடம்பெறாத நூலாசிரியர் வரலாறு, உரையாசிரியர் வரலாறு, செய்யுள்கள் முதற் குறிப்பகராதி புராணபடனவிதி முதலியனவும் இப்பதிப்பில் இடம் பெற்றுப் படிப்போருக்கு பெரும்பயன் தருவனவாய் இனிது அமைந்துள்ளன. நூல் எவ்வகையிலும் பாராட்டத்தக்கதாய் அமைந்துள்ளமை மகிழ்ந்துபோற்றற்குரியதாகும்.

23-2-71 இல் நிகழும் சிவராத்திரியை முன்னிட்டு வெளிவரும் இந் நூலை நாமெல்லோரும் வாங்கிப் படித்து மகிழ்வதோடு, திரு. கணபதிப்பிள்ளையவர்களையும் ஆசீர்வதிக்கும்படி கருணாமூர்த்தியாகிய சிவபெருமானை அன்று துதிப்போமாக. —:—

### நாவலர் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம்

வண் / நாவலர் மகாவித்தியாலயப் பழைய மாணவர் சங்கத்தின் மூன்றாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் 9 2-71 காலை 10 மணியளவில் மேற்படி வித்தியாலயத்தில் கூடியது திரு வை. சரவணமுத்து ஆசிரியர் தலைமை வகித்தார்.

புதுவருட நிர்வாகிகள் தெரிவு:

போஷகர்: பண்டிதமணி வித்துவான் திரு க. சுப்பையாபிள்ளை தலைவர்: திரு. தா. வேலுப்பிள்ளை (அதிபர்) உபதலைவர்: திரு. வை. ச. சரவணமுத்து ஆசிரியர். உபதலைவர்கள் ரேவதி குப்புசுவாமி, செயலாளர்: வ. கந்தசாமி ஆசிரியர். உபசெயலாளர்: க இராமசாமி பொருளாளர்: திரு. M. S. மாரிமுத்து உபபொருளாளர்: சு. ஏகாம்பரம், கணக்குப் பரிசோதகர்: க. பாலசுப்பிரமணியம் 15 நிர்வாகசபை உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர்.

# திரிகரண சுத்தியை வற்புறுத்தும் மகா

[3-ஆம் பக்கத்து வளர்ச்சி]

அகந்தையொழிந்து, அந்தச் சோதிக்குச் சமீபத்தே வந்து வணங்கி நின்றனர். தமது அறியாமையும் அகந்தையும் நீங்கும்வண்ணம் அயன்மால் இருவரும் சிவபெருமான் திருவுருவைத் தாபித்து நறுமலர், மஞ்சனம், சாந்தம், விளக்கு, தூபம் முதலியன விதியினால் அமைத்து ஒப்பரிய பூசைசெய்து வணங்கி நிற்க, சிவபெருமான்

மைக்களமும் மான் மழுவும்
வரதமுடன் அபயமுறு
மெய்க்கரமும் நாற்புயமும்
விளங்கு பணிக் கோடும்
பூணும்
செக்கருறு மதிச்சடையும
சேயிழையோர் பாகமுமாய்
முக்கணிறை யாங்காண
முன்னின்றே யருள்புரிந்தான்"

என்று கந்தபுராணம் கூறியவாறு வெளிப்பட்டு நின்று, அருள் புரிந்து அந்தச் சோதி வடிவினுள் சிவபிரான் மறைந்தருளிச் சிவலிங்கத் திருவுருவிலே காட்சி தந்தனர். அந்தச் சோதி அனற்பிழம்பாகிய மலைவடிவாய்ச் சமைந்தது. அதுவே திருவண்ணாமலையாகும். அங்ஙனம சோதிவடிவாகிய சிவபெருமான் சிவலிங்கமாய்த் தோன்றக்கண்டு அயன், மாலிருவரும் போற்றி வழிபட்டனர். சோதியாயிருந்த அனற்பிழம்பு சிவலிங்கருபமாக அவ்விருவருக்குக் காட்சி தந்த இரவே சிவராத்திரி ஆகும். அந்த இராத்திரியில் எல்லாத் தேவர்களும முனிவர்களும பூசித்துப் பெரும் பேறு எய்தினர்.

## இரவு பகல்

இனி, பகல் என்பது கருவி கரணங்களோடு கூடி அறிவு தொழிற்படும் காலமாகும். இரவு என்பது கருவி கரணங்கள் ஒடுங்கிக் கிடக்கும் காலமாகும். படைப்பு என்பது கருவி கரணங்களோடு உயிர்கள் கூடிநிற்கும் நிலையாகும். சங்காரம் என்பது கருவி கரணங்களிலிருந்து நீங்கி நிற்கும் நிலையாகும். இதனால் படைப்பு பகலாகும், சங்காரம் இரவு ஆகும் உயிர்கள் கருவிகரணங்களோடு கூடாத ஒடுக்க நிலையிலிருந்து (தோற்றம்) படைப்புக்கு வருமுன், அந்த நள் இரவிலே எல்லா உயிர்களையும் பெறுதுபெற்றெடுத்த உமாதேவியார், எல்லா உயிர்கட்கும் இறைவனுடைய அருளினாலே, வினையின் வேகமும், மலத்தின் வலிமையும் மாயையின் மயக்கமும முறையே குறைந்து (வலி கெட்டு) நிற்க, அதனால் வரும் சிவபுண்ணியப் பேறும சிவானந்த முத்தியும் உயிர்களுக்குச் சித்திக்க வேண்டி, அந்தப் பிராட்டியார் பூசித்த இரவு சிவராத்திரி என்றும் போற்றப்பெறும்.

அங்ஙனம உயிர்கள் அறிவு அற்றுக் கிடக்கும் மகா சங்கார காலமாகிய இரவிலேயிருந்தும், இனி வருங்காலமாகிய படைப்பிலே தமக்கு மலவலி கெடுமாறும் அறிவு விளங்குமாறும், சிவபெருமானை வேண்டத்தக்க அறிவும், ஆற்றலும், காதலும் இல்லாதவையாதலின், அவ்வுயிர்களின் மாட்டு என்றும் மாறாத கருணையே திருவுருவாகிய உமா பிராட்டியார் தமது மக்களின் நலன் கருதித் தாம் பூசிப்பாராயினர் என்க. இளங் குழந்தைகளுக்குக் கடுநோய்வந்தபோது அக்கடுநோய்க்குரிய வன்மையான மருந்தை அக்குழந்தைகள் அருந்தமாட்டா; அப்போது அதன்தாய் மருந்துண்டு, பத்தியங்காத்து, தமது அன்பின் பெருக்காகிய பாலை அக்குழந்தைக்கூட்ட, அதனால் அக்குழந்தையின் நோய் நீங்குதல் உலகவழக்கேயாதல்போல, உயிர்களுடைய துன்ப நீக்கமும் இன்பேறும் கருதி உமாதேவியார் பூசித்தல் மரபேயாகும். இதனை, 'பாலுண்குழவி பசுங்குடர் பொறாதென நோயுண்மருந்து தாயுண்டாங்கு" உலக மாதாவாகிய பிராட்டியார் பூசித்தல் நெறியேயாகும்.

## சிவராத்திரியன்று

இனி, மற்றக்காலங்களில் ஸ்ரீ பஞ்சாட்சர செபமும், சிவாலய தரிசனமும், சிவலிங்க பூசையும் செய்வதைவிட, மகா சிவராத்திரியாகிய மாசி மாதக் கிருஷ்ண பட்சம் இரவு 14 நாழிகைக்குமேல் 16 நாழிகைக்குட்பட்ட காலத்தில சதுர்த்தசியோடு கூடிய நல்ல நாளிலே, ஜபமும், தரிசனமும் பூசையும் செய்தோர் கோடிபங்கு சிறந்த பலனைப் பெறுவர்.

சிவதீட்சை பெறாத மக்கள் நல்லாசிரியரையடைந்து சமய தீட்சையேனும்பெற்று ஸ்ரீ பஞ்சாட்சர செபம்பண்ணக் கடவர்.

விசேட தீட்சைபெற்றோர் விபூதி, ருத்திராக்கம், சந்தனம நறுமண, புற்று மண் முதலியவைகளிலே சிவபெருமானை ஆவாகித்து அந்த இரவிலே நான்கு காலமும விசேட பூசைபண்ணக் கடவர்கள்.

நிர்வாண தீட்சை பெற்றோர் சிவலிங்கத் திருவுருவிலே அங்ஙனம் பூசைபண்ணக் கடவர்.

அன்று உதயத்தில் உரிய காலத்தில்எழுந்திருந்து, ஸ்நானம், அநுட்டானம நித்திய பூசைகளைச் செய்து, உணவின்றி உபவாசகமாக இருந்து. இரவிலே சிவாலய தரிசனமும, சிவபூசையுஞ் செய்து, மறுநாட் காலையிலே நித்திய கருமங்களை முடித்து அடியார்களோடிருந்து உண்ணக் கடவர்.

இங்ஙனம் செய்வோர் ஆணவாதி மும்மலங்களினின்று நீங்கி. இம்மையிலே எல்லாச் செல்வமும் பெற்று, முடிவிலே சிவபெருமான் திருவருளுக்கும் உரியவராவர் இங்ஙனம் சிவபுண்ணியங்களைச் செய்வோர் மனம், வாக்கு, காயம், என்னும் திரிகரணங்களும் ஒருங்குநிற்ப, சிவபூசை முதலிய செயல்களைச் செய்தல் வேண்டும். ஆனால் அந்தத் திரிகரணங்களாலோ காயம் முதலிய ஒன்றினாலேனும் வழிபாடு செய்வதாயின், பின்பு வாக்கினாலும் வழிபாடு செய்வதாயின், பின்பு அவற்றோடு மனமும் பொருந்த வழிபாடு செய்யும் தகுதியுடையராயும் திகழ்வர். இதனை அறியாததால், மூன்று கரணங்களும் ஒருமித்து நின்று வழிபடுவதின் சிறப்பைக் கூற வந்தனவேயன்றி பிறிதில்லை என்க. காயத்தால் மட்டும் வழிபடுவோரும், வாக்கால் மட்டும் வழிபடுவோரும், மனத்தோடு சேர்ந்த வழிபாடுடையராகி பயன்பெறுவதையே புராணங்கள் தமது உள்ளக்கிடக்கையாகக் கொண்டு கூறும் என்பது தெளிந்திடுக. இக் கருத்தறியாதார் புராணக் கருத்தை உணராது பிழைபடுவரென்க. சிவபூசையினாலேயன்றி, மனம் வாக்கு காயங்கள் ஒருமித்தலும் அங்ஙனம் ஒருமித்த வழி அவை நிலை பெறுதலும் கூடாதென்பதனை நல்லாசிரியன் மாட்டு தெளிந்துணர்ந்து கொள்க.

'ஏடுடைய மலரால் முனைநாள் பணிந்தேத்த அருள் செய்த' 'ஒரு நெறிய மனம் வைத்துணர் ஞானசம்பந்தன' எனவும் வரும் திருவாக்குகளை உணரும் மதுகையில்லார் பிறிதொன்று பேசி மயங்குவர். அன்னவர் நல்லாசிரியரையடைந்து அவர்தம் நல்லுரைகேட்டு நன்னெறி எய்துவாராக. 'எலுமாறு வல்லார்கள் எம்மையும் ஆளுடையாரே' – என்னும் திருவாக்கு என்றென்றும் நிலைபெறுவதாக.

முற்றிற்று.

(இக்கட்டுரை – பழனி ஈசான சிவாசாரியரால் ஆக்கப்பட்டது.)


### கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல: M B 11596

K. ஆறுமுகம் தர்மலிங்கம் காரைதீவு மேற்கு, காரைதீவு வழக்காளி

எதிராக

1. ஆறுமுகம் கனகசபையும்
2. பெண் தங்கம்மா இருவரும் காரைதீவு மேற்கு காரைதீவு — எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M B 11596 ம் - இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1971 ம் ஆ மார்ச் மீ 10-ம் உ (10-3-71) புதன்கிழமை காலை 10-00 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- ரூபா 6111/- பின் 28-3-70 தொடக்கம் 9-10-70 வரை ரூபா 4000/- 7 வீத வட்டியும் பின் இறுக்கப்படும்வரை முழுத் தொகைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 409 – 80 சதம்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி காரைநகர் கோவிற்பற்று காரைநகர் மேற்கு இறை 'நடபாவலை" ப. நி. 9ம் குழி 1 1/12 வீடுகளும் கிணறு மனைகளும் வடலிகளும் வளர்பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கு முத்தையா கைம்பெண் வள்ளியம்மைக்கும் கந்தையா பரமசாமிக்குரிய ஆதனம் வடக்கு ஒழுங்கையும் தில்லையம்பலம் முருகேசுவுக்குரிய ஆதனம் மேற்கு தில்லையம்பலம் முருகேசுவுக்கும சபாபதிப்பிள்ளை தம்பையாவுக்கும் சபாபதிப்பிள்ளை சோமசுந்தரத்துக்கும் உரிய ஆதனம் தெற்கு ஆறுமுகம் முருகேசுவுக்கும் முன் சொல்லப்பட்ட 1ம் அவருக்கும் உரிய ஆதனம் இது அடங்கலும் கிழக்கெல்லைக்காணி ஒழுங்கை அமைக்கும் [illegible] கைம்பெண் வள்ளியம்மையின் காணிக்கு போக்கு வரத்துப் பாதை உருத்து புறநீங்கலல

சி. செ மாரிமுத்து
கொமிஷனர் & விலைமதிப்பாளர்
[illegible].

"விதானை வளவு"
சுதந்தன்கேணி. 3-5-71.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

ஐயன் பூதன் – தெல்லிப்பளை கிழக்கு —வழக்காளி

வழ: இல. M B 10998 எதிராக

(1) இன்னம்பு வேலுப்பிள்ளையும பெண் (2) செல்லம்மாவும் - இருவரும தெல்லிப்பளை கிழக்கு —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டி M B / 10998 ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1971 ஆ மார்ச்சு (பங்குனி)மீ 28 ம் திகதி [28-3-71] ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை முதல்வட்டி ரூபாய் 2586/- ம் 29-7-69 தொடக்கம் 5-8 1970 வரைக்கும் ரூபாய் 2000/–க்கு 11 வீத வட்டியும் அதன்பின் இறுக்கும வரை முழுத்தொகைக்கும் 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 427/05 சதம்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பளை கோவிற்பற்று தெல்லிப்பளை கிழக்கு இறை "இளாலை" வாருச்செய்கை நிலப்பரப்பு 3 (LMS. V. C) ம் தெற்குப் பக்கத்தில் உள்ள கிணற்றில் மேற்கெல்லைக் காணிக்குரிய நீரப்பங்கும் வாய்க்காலுரித்தும் புறநீங்கலாக இக்காணிக்குரிய கிணற்றும் [illegible] பாவிப்புரித்தும் மற்றவைகளும, எல்லை கிழக்கு:- நாகநாதி தெய்வரப்பிள்ளையின் ஆதனம் வடக்கும் தெற்கும், ஒழுங்கை மேற்கு இளையதம்பி செல்லையாவும பெண் கதிரப்பிள்ளையினதும் ஆதனம்.

க சரவணமுத்து
173, குருசோவீதி, சுண்டிக்குளி கொமிசனர் & விலைமதிப்பாளர்
யாழ்ப்பாணம். 13-2-71 எம். 505 19-2-71

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

கார்த்திகேசு அருளம்பலத்தின் மகள் பொன்னம்மா, அரசடிறோட் வண்ணார்பண்ணை கிழக்கு, யாழ்ப்பாணம் —வழக்காளி

வழ இல: T/R 46 எதிராக

1. வே, கந்தசாமியினது மனைவி தங்கம்மா (2) வேலுப்பிள்ளை கந்தசாமி இருவரும் அரசடிறோட் வண்ணார்பண்ணை கிழக்கு. யாழ்ப்பாணம் - எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் T.R/46 ம் இலக்க வழக்கின் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1971ம் ஆடு பங்குனிமாதம் 9ந் திகதி (9-3-71) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம் வண்ணார்பண்ணை பிரிவு, வண்ணார்பண்ணை வடமேற்கு இறை "இசாலிக்குளம் வரையும் கிளுவேலயும்" நிலப்பரப்பு 12 ம் எல்லைகள் :- கிழக்கு:- சீனியர் சுப்பையாவின் ஆதனம் வடக்கு:- றோட்டு தெற்கு:- மொகமட் மீறான் கண்டு மரைக்கார் சுல்தான் அப்துல் காதரின் ஆதனம் மேற்கு தம்பிமரைக்காரின் விதவை அசன் கண்டு அம்மாவினதும், பங்குகாரர்களினதும் ஆதனம்.

க. சிவஸ்கந்தா
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்
நாச்சந்திரமடம், மதிப்பாளரும்,
வட்டுக்கோட்டை 5-2-71 எம். 502 19.2-71

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

அச்சுவேலி வடக்கு வேலன் சின்னத்தம்பி —வழக்காளி

வழ. இல: M B. 10123 எதிராக

பத்தைவேலி வல்லிபுரம் வைரமுத்து கைம்பெண் பொன்னம்மா தனக்காகவும் தனது காலஞ்சென்ற கணவன் வல்லிபுரம் வைரமுத்துவின் [illegible] பிரதி நிதியாகவும் — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10123 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1971 ம் ஆடு சித்திரைமீ 8 ம் உ (8-4-71) முற்பகல் 10-00 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை முதல்வட்டி ரூபாய் 3808 / - இன்னும் ரூபாய் 2000 / – திதுக்கு 30-6-68 தொடக்கம் 15-3-69 வரைக்கும் ரூபாய் 2000 / – திதுக்கு 10 % வீத வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 % வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 363 /–

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பிரிவு அச்சுவேலி கோயிற்பற்று பத்தைமேனியிலை களுகும்பறையின்த தோட்டம் பா. நில. இல 7 இதற்கெல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு எதிராளிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனங்கள் மேற்கு அன்னப்பிள்ளை சின்னையாவினுதனம் தெற்கு தாமோதரம்பிள்ளை கனகரத்தினத்துக்கும் பங்காளருக்குமுரிய வாதனம் இதடங்கலும் தெற்கிலிருக்கும் கிணற்றில் தண்ணீருரித்தும் அக்கிணற்றுக்குச் செல்லும் வழிவாய்க்காலுருத்தும்.

133 பருத்தித்துறை றோட்டு, செ. விசாகரெத்தினம்,
நல்லூர், யாழ்ப்பாணம், கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
14—2–71 எம். 506 19—2—71


வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில்; 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 19—2—1971 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள்